# அறிவுக் களஞ்சியம் : மாதாந்த பத்திரிகைப் புதிர்ப்போட்டி

ரா.அச்சலா சுகந்தினி*

**அறிமுகம்**

நூலகம் என்பது பண்டைய காலங்களைப்போல் அறிவேடுகளைத் தேக்கி வைக்கும் களஞ்சிய சாலைகளாக மட்டும் ஒடுக்கப்பட்டு விடாது காலத்தின் தேவைகருதியும், பயனாளிகளுக்கேற்ற வகையிலும் சமூகம் சார்ந்த பல பணிகளைச் செய்யவேண்டிய கடப்பாட்டிலுள்ளது. இதனடிப்படையில் பொது நூல கங்களாவன தமது பயனாளிகளின் நன்மை கருதி அவர்களுக்குப் பொருத்தமான செயற்றிட்டங்களை அமுலப்படுத்தி தம்மோடு இதுவரை காலமும் தொடர்புறாத வாசகர்களை ஈர்க்கும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது தற்காலத் தேவையாகவுள்ளது. பொது நூலகங்களைப் பொறுத்தவரையில் சிறுவர்கள், பெரியவர்கள், சிரேஷ்ட பிரஜைகள், விசேட தேவைக்குட்பட்டோர் போன்ற வகையினர் பயனாளிகளாகக் காணப்படினும் சிறுவர்கள் அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பத்திரிகை வாசிப்பில் ஈடுபடாமலிருப்பது பெரும் குறைபாடாகவேயுள்ளது. பாடசாலைக் கல்வி முடிவடைந்ததும் தமது உயர்கல்வி குறித்துத் தீர்மானம் எடுப்பதற்கும், அரச சேவையொன்றிற்குள் நுழைவதற்கும் பொதுஅறிவு எனும் விடயப்பரப்பு முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. இவ்விடயப்பரப்பு சார்ந்த அறிவை மாணவர்கள் பாடசாலைக்கல்வி மூலம் கற்றுக்கொள்ள முடியாதென்பதால் இதனை இளம்பருவத்திலிருந்தே வளர்க்க வேண்டியது நூலக உத்தியோகத்தர்களின் பணியாகின்றது.

இது குறித்து சிந்தித்த ஏறாவூர் நகர சபை பொது நூலகங்கள் ஒன்றிணைந்து அதன் ஆள்புல எல்லைக்குட்பட்ட இடைப்பிரிவு மாணவர்களை பத்திரிகை வாசிப்பில் ஈடுபடச்செய்து அவர்களின் பொது அறிவினை விருத்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு மாதந்தோறும் பத்திரிகைப் புதிர்ப்போட்டியொன்றை நடாத்தும் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாடசாலைப் பருவத்திலிருந்தே மாணவர்களின் பொது அறிவு விருத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**செயற்றிட்ட அமுலாக்கப் படிமுறைகள்**

மாதாந்த பத்திரிகைப் புதிர்ப்போட்டியானது “அறிவுக் களஞ்சியம்” எனும் பெயரில் மேற்கொள்வதற்கு நூலக ஆலோசனைக் குழுவில் தீர்மானிக்கப்பட்டு, வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட குழுவினருடனான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக போட்டி விதிமுறைகள் திட்டமிடப்பட்டு, அவை சுற்று நிருபங் கள் மூலமாகப் பாடசாலைகளுக்குத் தெளிவூட்டப்பட்டன. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒன்பதாம் தரத்திற்கும் உயர்தரத்திற்கும் இடைப்பட்ட ஐந்து மாணவர்கள் கொண்ட ஒரு குழு போட்டியில் பங்கு பற்றுவதெனவும், போட்டியானது ‘‘League’’ சுற்று முறையில் நடாத்தப்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**Corresponding author*: ரா.அச்சலா சுகந்தினி, ஏறாவூர் நகர சபை நூலகம், ஏறாவூர், மட்டக்களப்பு, இலங்கை. Email: asugandini@gmail.com

முதலாம் சுற்றுப் போட்டியில் பாடசாலைகள் ஒன்றுக்கொன்று மோதி அவற்றில் வெற்றி பெற்ற நான்கு பாடசாலைகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. அரையிறுதிப் போட்டியில் தெரிவாகிய இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற பாடசாலைக்கு "Genius School of the Month" விருதையும், ஒரு மாதத்திற்கான இலவச அரச பத்திரிகையொன்றையும், வெற்றி பெற்ற அணியினருக்கு நினைவுச் சின்னங்களையும், சான்றிதழ்களையும் வழங்குவதோடு, பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர். இந்நிகழ்விற்கான நிதி அனுசரணையானது நன்கொடையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்

இப்பத்திரிகைப் புதிர்ப்போட்டிக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தும்போது அவர்களின் பொதுஅறிவுத் திறன் பரிசோதிக்கப்பட்டது. அவ்வேளையில், மிகக் குறைந்தளவு திறனைக் கொண்டிருந்த மாணவர்கள் முதலாவது போட்டியின்போது தம்மால் இயன்றளவு பதில்களை அளித்து போட்டிகளில் வெற்றிபெற முனைந்தனர். அவர்களுள் சிலர் எல்லாச் சுற்றுக்களிலும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு சிரமப்பட்டமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக முதலாவது போட்டியில் அணியொன்றுக்குத் தலா 10 வினாக்கள் என்ற அடிப்படையில் மொத்தமாக வினாவப்பட்ட 140 வினாக்களில் 30% அதாவது 42 வினாக்களுக்கு மட்டுமே மாணவர்கள் சரியான விடையளித்திருந்தமை எம்மால் அவதானிக்கப்பட்டது.

இருப்பினும், அடுத்தடுத்த மாதங்களில் நடாத்தப்பட்ட போட்டிகளில் எம்மால் தயாரிக்கப்பட்ட வினாக்களில் 90%இற்கும் அதிகமானவற்றிற்கு மிகத் திறமையாக விடையளித்து அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். இதன்மூலம் மாணவர்கள் பத்திரிகை வாசிப்பில் வேரூன்றியிருப்பதையும், சமகால நிகழ்வுகள் குறித்த விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதையும் புலப்படுத்துகின்றது. ஏறாவூர் நகர சபை நூலகங்களின் உசாத்துணைப் பிரிவு, இரவல் வழங்கல் பிரிவுகளை மட்டுமே பயன்படுத்தி வந்த மாணவர்கள் இப்பத்திரிகைப் புதிர்ப்போட்டியானது ஆரம்பிக் கப்பட்டதன் பின்னர் பத்திரிகைப் பிரிவையும் பயன்படுத்தத் தொடங்கினர். இம்மாற்றமானது குறித்த நூலகங்களில் மாணவ அங்கத்தவர்களை அதிகரிக்கச் செயவதோடு அவர்களுக்கென பிரத்தியேகமாக சிறுவர் வாசகர் வட்டமொன்றை உருவாக்கி தமது பிரச்சனைகளையும், தேவைகளை யும் அவர்களே வெளிக்கொணர்வதற்கும் வழிகோலியது.

இதே பாணியில் தமது வாசிப்பினை மேற்கொள்ளும்போது அவர்கள் தமது பொதுஅறிவை விருத்தி செய்துகொள்வதோடு, இலங்கையில் நடாத்தப்படும் சகல போட்டிப் பரீட்சைகளையும் எவ்வித தயக்கமுமின்றி எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், மாதந்தோறும் இப்போட்டிகளில் வினாவப்படும் வினாக்கள் மற்றும் அவற்றுக்கான சரியான பதில்கள் என்பன உசாத்துணைக் குறிப்புக்களோடு நூலுருவாக்கம் செய்யப்பட்டு, ஏறாவூர் நகர சபையின் அனைத்துப் பொது நூலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்போட்டிகளில் பங்குபற்றாத மாணவர்களும் இதனை வாசித்துப் பயனடைந்து கொள்வார்கள். மாணவர்கள் உலக அறிவினைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் சமகால நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து செயற்படுவதற்கு இதுபோன்ற போட்டிகள் அவசியமானதென உணரப்படுகிறது.

### முடிவுரையும் பரிந்துரைகளும்

இப்போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களிடமிருந்து Google Forms மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீடுகளின் அடிப்படையில் பொது நூலகங்களால் முன்னெடுக்கப்படும் இத்தகைய போட்டிகளானவை வகுப்பறைக்கு அப்பால் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கும்,

அவர்களின் கற்றலை மதிப்பிடுவதற்கும், புதிய கருத்துக்களை வழங்குவதற்கும், அறிவாற்றல் வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், எதிர்கால கல்விச் சவால்களுக்கு அவர்களைத் தயார் செய்வதற்கும் இன்றியமையாத கருவிகளாக உள்ளன என்பது புலப்படுகின்றது.

அத்துடன், இவை மாணவர்களின் அறிவு மற்றும் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல், பகுப்பாய்வு மற்றும் விமர்சன சிந்தனையை உருவாக்குதல், ஆராய்ச்சி மற்றும் ஆர்வத்தை ஊக்குவித்தல், சமூக மற்றும் கலாசாரப் புரிதலை ஏற்படுத்தல், குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல், மாணவர்களின் கல்விப்போக்கை வேடிக்கையாகவும் ஈடுபாடுடையதாகவும் ஆக்குதல் போன்ற பணிகளைச் செய்வதில் பங்களிப்புச் செலுத்துவதாகவும் இக்கருத்துக் கணிப்பீடுகள் பறைசாற்றுகின்றன.

இத்தகைய போட்டிகள் பாடசாலை மாணவர்களோடு மட்டுப்படுத்தப்படாது, சமூகத்திற்கும் கொண்டு செல்லப்பட்டு வேலையற்ற இளைஞர்களைப் போட்டிப்பரீட்சைகளுக்கு ஊக்குவிக்கும் வகையில் நடாத்தப்படவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்படுகின்றது. அத்துடன், இணையவழி பத்திரிகை வாசிப்பை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், நூலுருவாக்கம் பெற்ற கடந்தகால பத்திரிகைப் புதிர்ப்போட்டிகளில் கேட்கப்பட்ட வினா – விடைகள் மின்னூல் வடிவில் வெளியீடு செய்யப்படுவதற்கும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** பத்திரிகை வாசிப்பு, பாடசாலை மாணவர்கள், புதிர்ப்போட்டிகள், பொதுஅறிவு, அறிவுக்களஞ்சியம்